# 11

# அனுதின வாழ்வில் சிலுவை

## The Cross in Daily Life

### *முகவுரை*

லூக் 9:23 ... *தன் சிலுவையைத் தினமும் எடுத்து ... பின்பற்றட்டும்*

- சிலுவை சுமந்து இயேசு சிலுவையிலறையப்பட்டார் ;
  நாம் சிலுவையிலறையப்பட்டுச் சிலுவை சுமக்கவேண்டும்.

- ''சிலுவை'' என்பது தேவனது பிந்திய திட்டமல்ல.
  *''உலகத்தோற்றத்திற்கு முன்னரே''*
  அது அவரது ஞானத்திலிருந்தது (வெளி 13:8)

  துவக்கமில்லா நித்தியத்திலிருந்து முடிவில்லா நித்தியத்திற்கு
  அது செல்கிறது.

- விண்ணுலகில் சிலுவை சுமத்தல் இராது எனினும்,
  அங்கு கிறிஸ்துவின் பெயர் *''ஆட்டுக்குட்டியானவர்''* என்பது —

  1. ஆட்டுக்குட்டியானவருக்குத் தொழுகை (வெளி 5:12)
  2. ஆட்டுக்குட்டியானவரின் கோபம் (6:16)
  3. மேய்க்கும் ஆட்டுக்குட்டியானவர் (7:17)
  4. ஆட்டுக்குட்டியானவரின் பாட்டு (15:3)
  5. ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் (19:7)
     — ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்து (19:9)
     — ஆட்டுக்குட்டியானவரின் மனைவி (21:9)
  6. ஆட்டுக்குட்டியானவரின் அப்போஸ்தலர் (21:14)
  7. ஆட்டுக்குட்டியானவரே ஆலயம் ( 21:22)
  8. ஆட்டுக்குட்டியானவரே வெளிச்சம் (21:23)
  9. ஆட்டுக்குட்டியானவரின் புத்தகம் (21:27)
  10. ஆட்டுக்குட்டியானவரின் சிங்காசனம் (22:1,3)

  சிலுவைக்காய் அல்லேலூயா!

- **''அனுதினச்** சிலுவையை'' **''அனுதின** ஆசியாய்க்'' கருதுங்கள்
  நமது அடிப்படையான ஐந்து ஆன்மீகப் பயிற்சிகளில்
  சிலுவையின் செயல்பாட்டை இங்கு படிப்போம் —



| | |
|---|---|
| 1. அனுதின ஆராதனை | Daily Worship |
| 2. அனுதின திருவசனத் தியானம் | Daily Wordstudy |
| 3. அனுதின வேலைகள் | Daily Works |
| 4. அனுதின சாட்சி | Daily Witnessing |
| 5. அனுதினக் கவலைகள் | Daily Worries |

### *1. அனுதின ஆராதனையும் சிலுவையும்*

- *''தமது மாம்சத்தின் நாட்களில்''* ஜெபத்தில் கிறிஸ்து (எபி 5:7,8)
  *''பலத்த சத்தம்'' ... ''கண்ணீர்'' ... ''பயபக்தி''*

  இன்று ஜெபத்தைக் குறித்து வேறுவிதமான உபதேசம்
  நடமாடுகிறது —

  அதில் ''பயபக்தி'' இல்லை.
  தேவனுக்குக் ''கட்டளை'' எனும் அளவிற்குச் செல்லுகிறது.

— அவர் நமது ''அப்பாதானே'' என்ற வாதம்!
ஆனால் உண்மை என்னவெனில் (வச 8) ...*''குமாரனாயிருந்தும்''*

- தேவனை அல்ல, நம்மை மாற்றத்தான் ஜெபம்!

  பதிலளிக்கப்பட்ட ஜெபம் பற்றிய ஒரு சாட்சி —

  பலத்தைக் கேட்டேன்,
  என்னைப் பலப்படுத்தும் இன்னல்களைத் தேவன் தந்தார்.
  ஞானத்தைக் கேட்டேன்,
  தீர்க்கக் கற்றுக்கொள்ள தேவன் பிரச்னைகள் தந்தார்.
  வளவாழ்வைக் கேட்டேன்,
  உழைக்கப் புத்தியும் சக்தியும் தேவன் தந்தார்.
  தைரியத்தைக் கேட்டேன்,
  மேற்கொள்ள ஆபத்துக்களைத் தேவன் தந்தார்.
  அன்பைக் கேட்டேன்,
  உதவி தேவைப்படும் மக்களைத் தேவன் தந்தார்.
  சலுகைகள் கேட்டேன்,
  வாய்ப்புகளைத் தேவன் தந்தார்.

நான் கேட்டது ஒன்றும் கிடைக்கவில்லை;
எனக்குத் தேவையானது அனைத்தும் கிடைத்துவிட்டது;
எனது ஜெபம் பதிலளிக்கப்பட்டுவிட்டது!

- வேதத்தில் வேறுவிதமாய்ப் பதிலளிக்கப்பட்ட ஜெபங்கள் —
  - ☐ *நமக்கு மூன்று கூடாரங்கள் போடுவோம்* (மத் 17:4)
  - ☐ *எலியா போல நாங்கள் அக்கினி இறக்கட்டும்* (லூக் 9:54)
  - ☐ *''ஆண்டவரே, பட்டயத்தால் வெட்டட்டுமா?''* (லூக் 22:49)
    அவர் பதிலளிக்கவில்லை; அவர்கள் செய்துவிட்டனர்.
  - ☐ *எனக்கும் சகோதரனுக்குமுள்ள பிரச்சனையைத் தீர்த்துவையும்* (லூக் 12:13)
  - ☐ *என் மகன்களுக்கு வலதிடது ஆசனங்கள் தாரும்* (மத் 20:21)
  - ☐ *வந்து லாசருவைக் குணமாக்கும்* (யோ 11:3)
  - ☐ *எனக்கு உதவ மரியாளுக்குச் சொல்லும்* (லூக் 10:40)
  - ☐ *திரள் கூட்டத்தை அனுப்பிவிடும்* (மத் 14:15)
  - ☐ *இந்தத் தண்ணீரை எனக்குத் தாரும்* (யோ 4:15)
  - ☐ *உம்மிடம் ஓர் அடையாளம் காண விரும்புகிறோம்* (மத் 12:38)
  - ☐ *இந்த முள்ளை எடுத்துப்போடும்* (2 கொரி 12:8)
  - ☐ ''மரணத்தினின்று என்னை விடுவியும்'' (மத் 26:53; யோ 12:27; எபி 5:7)

  ஆத்துமாவின் மரணத்தினின்று
  பிதாவானவர் அவரை விடுவித்தார் (அப் 2:27)

## *2. அனுதினத் திருவசனத் தியானமும் சிலுவையும்*

- திருவசனத் தியானம் நமது இதயத்தை மகிழ்வித்தாலும்,
  அதன் பிரதான நோக்கம் நம்மை மாற்றித்
  தேவனது திட்டத்திற்குள் பொருந்தச் செய்வதே —

  எபி 10:5-7, *''உம் சித்தம் செய்ய இதோ வருகிறேன்;*
  *புத்தகச் சுருளில் என்னைப்பற்றி எழுதியிருக்கிறது''*

  எம்மாவூர் சாலையில் சீடர்களுக்கு இயேசு
  வலியுறுத்திய செய்தி இதுவே —
  லூக் 24:25-27 ... *ஆகமங்கள், சங்கீதங்கள், தீர்க்கதரிசனங்கள்*



- திருவசனம் ஒரு *''பட்டயம்''* —
  அது வெண்ணெய் தடவும் கத்தி அல்ல!

*பட்டயத்தின்* வேலை —
எபி 4:11-13 ... ''அறுவை சிகிச்சை கத்திபோல் கூர்மை.''
வலிக்கத்தான் செய்யும்.

நாமோ பைபிளில் கவர்ச்சியான வாக்குகளை மட்டும்
எடுத்துக்கொண்டு அதின் கட்டளைகளை ஒதுக்கிவிடுகிறோம்.

தேவனது வாக்குகளில் ''நிற்கிறோம்'' எனப் பாடுகிறோம்;
ஆனால் அவரது வாசல்களில் ''உட்கார்ந்திருக்கிறோம்;''
பைபிளைத் தலையணையாய் வைத்துத் ''தூங்குகிறோம்;''
அவ்வளவுதான்! —

நம்மை **ஆராய்ந்துபார்க்கவே** திருவசனம் —
அது ஒரு விளக்கு. (Lamp)
அது முகம் பார்க்கும் கண்ணாடி. (Mirror)
அது ஒரு தூக்குநூல். (Plumbline)
அது அக்கினி! (Fire)

*''சிறு பிள்ளைகள்''* போல் மாறிட அது நம்மை நறுக்குகிறது.
அது கடினம்தான்.

எ.கா.) சூனேமியாளின் குழந்தைமீது
தீர்க்கன் எலிசா படுத்தது (2 இரா 4:32-35)

- திரும்பத் திரும்ப — ''மூன்று முறை படுத்தார்!''
- படிப்படியாக — ''ஏழு முறை தும்மி எழுந்தான்!''

## *3. அனுதின வேலைகளும் சிலுவையும்*

- வேலை என்பது தேவன் தந்த ஆசீர்வாதம் (ஆதி 2:15)
  ஆனால் வீழ்ச்சியையடுத்து அதில் சாபத்தைச் சேர்த்தார் —
  (ஆதி 3:17-19)

  சாபமானது ஆணுக்கு அவனது வேலையில் (work);
  பெண்ணுக்கு அது அவளது கருப்பையில் (womb).

இன்னும் அது நீக்கப்படவில்லை! (பிரசவ வேதனை)

எனவே நமது வேலையிலும் வேலைத்தலத்திலும் நமக்கு
நேரிடும் பிரச்னைகள், போராட்டங்கள் குறித்து
நாம் ஆச்சரியப்படக்கூடாது.

- கீழ்க்கண்ட ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள் —

அ) வேலை அல்லது வேலைத்தலம் குறித்து முறுமுறுக்காதீர்.
1 கொரி 7:24 ... *அழைக்கப்பட்ட நிலைமை*
சிம்மாசனமோ சிறையோ யோசேப்பு யோசேப்புதான்!

ஆ) அதிகாரிகள், உடன் ஊழியரோடு சுமூகமாய்ப் பழகுவீர்.
1 பேது 2:13-22 ... *கீழ்ப்படிதல் ... நன்மை செய்தல்*

அநியாயத்தைச் சகிப்பீர் —
சிலுவை = *அவரது நியாயம்*
*அவரை விட்டு எடுபட்டுப் போயிற்று*
(ஏசா 53:8; 1 பேது 2:23)

இ) வேலையில் கவனமாய், நேர்த்தியாயிருப்பீர்.
நமக்குத் தரப்பட்ட வேலைகளில் பல செய்யப்படவில்லை;
பாதிதான் செய்யப்பட்டுள்ளன;
சரியாய்ச் செய்யப்படவில்லை.

சிலுவையில் இயேசுவின் வெற்றி முழக்கம் —
*''முடிந்தது!''*

இங்கு ''நன்றாய்ச்'' செய்தால்தான்,
அங்கு *''நல்லது''* என்று வரவேற்பு கிடைக்கும்!

### *4. அனுதின சாட்சியும் சிலுவையும்*

பொல்லாத உலகில் சாட்சி பகருவது தன்னல மறுப்பும்
சிலுவை சுமத்தலும்தான் —

''இன்று இயேசுவைக் குறித்து நீங்கள் வெட்கப்பட்டால்,
நாளை உங்களைக் குறித்து அவர் வெட்கப்படுவார்!''

மாற் 8:34 -38
ஏளனம் ...
கேலி ...
எதிர்ப்பு ...
தள்ளப்படுதல்,
முதலியன



இயேசு வேண்டாம்! ... பவுல் வேண்டாம்! ...
*''வாசலுக்குப் புறம்பே போவோம்!''* (எபி 13:13)

- *நாள்தோறும் சாகிறேன் ...*
நாழிகைதோறும் நாசமோசம் ... (1 கொரி 15:30-32)

*எபேசுவில் ''மிருகங்களோடு'' போராட்டம்* —
அதாவது, தியானாளை வணங்குவோர்.
அப் 19:24-35 ... தியானாளின் சிலை
வானத்திலிருந்து விழுந்ததாம்!
(வச 35)

இந்தியாவில் இப்படிச் சொல்லப்படும் ஏராளமுண்டு!

- நமது அர்ப்பணிப்பு —

*''என்னால் ஆன மட்டும்*
*சுவிசேஷம் பிரசங்கிக்க ஆயத்தம்''* (ரோ 1:15)

*''செலவழிக்கவும் செலவழிக்கப்படவும் ...''* (2 கொரி 12:15)

அவர் நமக்காய்த் தமது முதுகைத் தந்தார் (சங் 129:3);
நாம் அவருக்காய் நமது கழுத்தைக் கொடுப்போம் (ரோ 16:4)

### *5. அனுதினக் கவலைகளும் சிலுவையும்*

- கவலையே இல்லாத நபர் இவ்வுலகிலில்லை.
*''நமது கண்ணீர் யாவையும் தேவன் துடைக்கும்''* மறுவுலகிற்குச்
செல்லும்வரை கவலைகள் தொடரும்.

இன்றோ *''எந்நேரமும் கொல்லப்படுகிறோம்''* (ரோ 8:35,36)

ஆனாலும் நமக்கு இரு உதவியாளர்கள் —

அ) இங்கு நமக்குள் ஆவியானவர் (வச 26)
ஆ) அங்கு நமக்காக ஆண்டவர் (வச 34)

நமது கவலைகளல்ல,
மக்களின் இரட்சிப்பே நமது பெரும் கவலை —
(ரோ 9:1,2)

அணுவை இரண்டாய்ப் பிளக்கும்போதுதான்
கற்பனைக்கு மிஞ்சிய சக்தி அதில் வெளிப்படுகிறது!

பவுலின் முள் அவரை உருக்குலைக்கவில்லை,
உந்தித் தள்ளிற்று!

- தீமோத்தேயுவுக்குப் பவுலின் ஊக்கமூட்டும் வார்த்தைகளோடு இத்தியானத்தை முடிப்போம் —

2 தீமோ 2:11,12

சிலுவை சுமப்போம்,
சிம்மாசனம் அமர்வோம்!

*‘‘இது உண்மையுள்ள வார்த்தை!’’*

